# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1865/28 - 2014 ජූනි මස 04 වැනි බදාදා - 2014.06.04

*1865/28 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) (அ) பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்தவங்களைப் பிரயோகித்து, என்னால் 2010, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1681/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2014, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு, கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2014, யூன் 02.

அட்டவணை

(1) அவ்வறிவித்தலிலுள்ள கல்வி அமைச்சர் (இல. 37) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இலுள்ள 6 ஆவது விடயத்தையடுத்து பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் -

"7. இலவச பாடநூல் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தலும் வழிநடாத்துதலும் ;

8. பிரிவெனாக்களில் கல்வி கற்கும் பௌத்த பிக்குமார் மற்றும் சாதாரண மாணவர்களுக்காக இலவச சீருடை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தலும் வழிநடாத்துதலும் ";

(2) அவ்வறிவித்தலிலுள்ள கல்விச் சேவைகள் அமைச்சர் (இல. 68) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இலுள்ள 5 ஆவது விடயத்திற்குப் பதிலாக, பின்வரும் விடயத்தைப் பதிலீடு செய்வதன் மூலமும் -

"5. பாடசாலை மாணவர்களுக்காக இலவச சீருடைகள் (பிரிவெனாக்கள் தவிர்ந்த), காலணிகள், மேசைகள், கதிரைகள் உள்ளிட்ட உபகரணங்கள் மற்றும் மதிய உணவு முதலியவற்றை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தலும் வழிநடாத்துதலும்" ;

6- 540